இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 164 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – தை 11 – வெள்ளிக்கிழமை 24 ஜனவரி 2025 – திருச்சி ★★ 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 164 : Thiruvalluvar Year - 2056 - Thai 11 - Friday 24 January 2025 - Trichy ★★ 12 Pages ₹ 5.00


## இருட்டில் அமாவாசையை எண்ணும் பழனிசாமி போடும் கணக்கு அனைத்தும் தப்புக் கணக்குதான்!

## அறிவித்த திட்டங்களை நிறைவேற்றி மக்கள் முகத்தில் மகிழ்ச்சியைக் காணுகிறோம்!

# தமிழ்நாட்டை தி.மு.க.தான் தொடர்ந்து ஆளும்!

## சிவகங்கை விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி!

**சிவகங்கை, ஜன. 24-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (22.1.2025) சிவகங்கையில் நடைபெற்ற அரசு விழாவில், முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்து, புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி ஆற்றிய உரை வருமாறு:-**

சிவகங்கை மண்ணுக்கு வரும் போதே எனக்கு சிலிர்ப்பு ஏற்படுகிறது! வீரம் பிறக்கிறது! முத்து வடுகநாதர், வீரமங்கை வேலு நாச்சியார் – மானம் காத்த மருது சகோதரர்கள் – தியாகச் சுடர் குயிலி போன்றோர் வாழ்ந்த மண் இந்த சிவகங்கை மண்! வீரத்துக்கு அடிப்படையான தமிழின் தொன்மையை, உலகுக்கு உரைக்கக் கூடிய கீழடித் தடயங்களும் கொண்ட மண்தான், இந்தச் சிவகங்கை சீமை!

வீரமும் புகழும் கொண்ட இந்த மாவட்டத்தை, நம்முடைய ஆற்றல் மிக்க அமைச்சர், பெரியகருப்பன் அவர்கள் எல்லா வகையிலும் சிறப்பாக வளர்த்தெடுக்கிறார்! நம்பி பொறுப்பு கொடுக்கலாம் என்று நான் நினைப்பவர்களின் பட்டியலில் இருக்கக் கூடியவர் தான் நம்முடைய பெரியகருப்பன் அவர்கள்! அவர் பேசுவது வேண்டுமானால், பொறுமையாக அமைதியாக இருக்கலாம், நிதானமாக இருக்கலாம்! ஆனால், செயலில் வேகமும் நேர்த்தியும் நிச்சயமாக இருக்கும்! அதனால்தான், இந்த விழாவையும், மாநாடு போல மிகப் பிரம்மாண்டமாக ஏற்பாடு செய்திருக்கிறார். அவருக்கும் மாவட்டத்தின் ஆட்சியர் ஆஷா அஜீத் அவர்களுக்கும், மாவட்ட அலுவலர்கள் அனைவருக்கும் என்னுடைய பாராட்டுக்களையும், வாழ்த்துகளையும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்!

சிவகங்கைச் சீமையை வளர்த்ததில் கழக ஆட்சிக்கு மிகப்பெரிய பங்குண்டு! கழக ஆட்சி அமைந்தாலே, நலத்திட்ட உதவிகள் சிவகங்கையைத் தேடி வரும்... அப்படி, சிவகங்கை மாவட்டத்திற்கு என்று கழக ஆட்சிக் காலங்களில் செய்யப்பட்டிருக்கக்கூடிய சில திட்டங்களை மட்டும் நான் உங்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (22.1.2025) சிவகங்கையில் நடைபெற்ற அரசு விழாவில், 51 கோடியே 37 இலட்சத்து 6 ஆயிரம் ரூபாய் செலவில் 46 முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்து, 164 கோடியே 1 இலட்சத்து 63 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான 33 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். இந்த விழாவில், கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், பால்வளம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் ஆர். எஸ். ராஜகண்ணப்பன், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன், நாடாளுமன்ற உறுப்பினர் கார்த்தி ப.சிதம்பரம், சட்டமன்ற உறுப்பினர்கள் திருமதி ஆ.தமிழரசி, எஸ்.மாங்குடி, சிவகங்கை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ஆஷா அஜித், உள்ளாட்சி அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### ஆற்றல் மிக்க அமைச்சர் பெரியகருப்பன்!



**வீரமும் புகழும் கொண்ட இந்த மாவட்டத்தை, நம்முடைய ஆற்றல் மிக்க அமைச்சர், பெரியகருப்பன் அவர்கள் எல்லா வகையிலும் சிறப்பாக வளர்த்தெடுக்கிறார்! நம்பி பொறுப்பு கொடுக்கலாம் என்று நான் நினைப்பவர்களின் பட்டியலில் இருக்கக்கூடியவர் தான் நம்முடைய பெரியகருப்பன் அவர்கள்! அவர் பேசுவது வேண்டுமானால், பொறுமையாக அமைதியாக இருக்கலாம், நிதானமாக இருக்கலாம்! ஆனால், செயலில் வேகமும் நேர்த்தியும் நிச்சயமாக இருக்கும்! அதனால்தான், இந்த விழாவையும், மாநாடு போல மிகப் பிரம்மாண்டமாக ஏற்பாடு செய்திருக்கிறார். அவருக்கும் மாவட்டத்தின் ஆட்சியர் ஆஷா அஜீத் அவர்களுக்கும், மாவட்ட அலுவலர்கள் அனைவருக்கும் என்னுடைய பாராட்டுக்களையும், வாழ்த்துகளையும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்!**

- சிவகங்கை, திருப்பத்தூர், நெற்குப்பை, இளையான்குடி, கல்லல், காளையார் கோவில் உள்ளிட்ட பகுதி மக்கள் பயனடையக்கூடிய வகையில், 616 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான காவிரி கூட்டுக் குடிநீர் திட்டம்!
- சிவகங்கை மருத்துவக் கல்லூரி!
- 55 திருக்கோயில்களில், 14 கோடி ரூபாய் செலவில் திருப்பணி!
- இளையான்குடியில், சார்பதிவாளர் அலுவலகம், நீதிமன்றக் கட்டடம், கருவூலம், ஆதிதிராவிட மாணவர்களுக்கான தங்கும் விடுதி, அரசு மருத்துவமனை விரிவாக்கம்!
- இளையான்குடியில் புறவழிச் சாலை!
- சிவகங்கையில் ஒருங்கிணைந்த நீதிமன்றம், மாணவ மாணவியர் விடுதிகள், பள்ளிக் கட்டடங்கள், அரசு மருத்துவமனை, ஆரம்ப சுகாதார நிலையங்கள்!
- மதுரைதொண்டி தேசிய நெடுஞ் சாலை!
- சிவகங்கையில் புதிய நகராட்சிக் கட்டடம்!
- மகளிர் கல்லூரி!
- கூட்டுறவு தொழிற்பயிற்சி கல்லூரி

என்று இப்படி சொல்லிக் கொண்டிருந்தால், நாள் முழுவதும் நான் வரிசைப்படுத்தி சொல்லிக்கொண்டே இருக்கலாம்!

**மூன்றரை ஆண்டில் நமது அரசு நிறைவேற்றித் தந்த திட்டங்கள்!**

அதுமட்டுமல்ல, நம்முடைய திராவிட மாடல் அரசில் கடந்த மூன்றரை ஆண்டு காலத்தில், அறிவித்து, செயல்படுத்திக் கொண்டிருக்கக்கூடிய திட்டங்கள் குறித்தும், நேற்று நான் காரைக்குடியில் ஆட்சியர் மற்றும் அரசு அதிகாரிகளுடன் ஆய்வு செய்தேன். அந்த பணிகளைப் பட்டியலிட்டு சொல்லவேண்டும் என்றால்,

- காவிரி ஆற்றை நீர் ஆதாரமாகக் கொண்டு, எட்டு பேரூராட்சிகளுக்கும், இரண்டாயிரத்து 452 ஊரக குடியிருப்புகளுக்கும், மூன்று நகராட்சிகளுக்கும், ஆயிரத்து 753 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெறும் கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணிகள் விரைவில் நிறைவடைய போகிறது!
- காரைக்குடியில் சங்கரபதி கோட்டை மறுசீரமைப்பு!

தொடர்ச்சி 3-ஆம் பக்கம்

## சிவகங்கை மாவட்டத்தில் ரூ.376.49 கோடியில் 46 முடிவுற்ற பணிகள் – 33 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி

# 53,039 பயனாளிகளுக்கு ரூ.161 கோடியில் அரசு நலத்திட்ட உதவிகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

சிவகங்கை, ஜன. 24-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சிவகங்கை அரசு விழாவில் கலந்து கொள்வதற்காக 21.1.2025 அன்று சிவகங்கை மாவட்டம், காரைக்குடிக்கு வருகை தந்தார். அழகப்பா பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெற்ற விழாவில், முன்னாள் ஒன்றிய அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ப.சிதம்பரம் அவர்களின் சொந்த நிதியில் 12 கோடி ரூபாய் செலவில் அழகப்பா பல்கலைக்கழக வளாகத்தில் கட்டப்பட்டுள்ள திருமதி லக்ஷ்மி வளர்தமிழ் நூலகம் மற்றும் அழகப்பா பல்கலைக்கழக முன்னாள் மாணவர்களின் நிதி பங்களிப்பில் 5 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள அய்யன் திருவள்ளுவர் திருவுருவச் சிலை ஆகியவற்றை திறந்து வைத்தார்.

அதனைத் தொடர்ந்து, அன்று மாலை காரைக்குடி, அரசு ஆதிதிராவிடர் நல மாணவியர் விடுதிக்கு நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு செய்து, மாணவிகளிடம் விடுதியில் வழங்கப்படும் உணவின் தரம் குறித்தும், விடுதியில் உள்ள வசதிகள் குறித்தும், அவர்களின் தேவைகள் குறித்தும் கேட்டறிந்தார்.

பின்னர், முதலமைச்சர் அவர்கள் தலைமையில், சிவகங்கை மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சி திட்டப் பணிகள், முதலமைச்சர் அவர்களின் அறிவிப்புகள், சட்டப் பேரவை மானியக் கோரிக்கையின் போது அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள் ஆகியவற்றின் தற்போதைய நிலை குறித்து ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

அதன் தொடர்ச்சியாக 22.1.2025 அன்று சிவகங்கை மாவட்டம், சிவகங்கை வட்டம், ஒக்கூர் இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாமிற்கு நேரில் சென்று, அங்கு தங்கியுள்ள இலங்கை தமிழர்களிடம் அவர்களுக்கு செய்து தரப்பட்டுள்ள வசதிகள் குறித்தும், அவர்களது தேவைகள் குறித்தும் கேட்டறிந்தார்.

தொடர்ந்து, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சிவகங்கையில் நடைபெற்ற அரசு விழாவில், 51 கோடியே 37 இலட்சத்து 6 ஆயிரம் ரூபாய் செலவில் 46 முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்து, 164 கோடியே 1 இலட்சத்து 63 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான 33 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, 53,039 பயனாளிகளுக்கு 161 கோடியே 11 இலட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

தொடர்ச்சி 4-ஆம் பக்கம்





முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (22.1.2025) சிவகங்கையில் நடைபெற்ற அரசு விழாவில், 53,039 பயனாளிகளுக்கு 161 கோடியே 11 இலட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்த விழாவில், அமைச்சர்கள் கே.ஆர்.பெரியகருப்பன், ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், முனைவர் கோவி.செழியன், நாடாளுமன்ற உறுப்பினர் கார்த்தி ப.சிதம்பரம், சட்டமன்ற உறுப்பினர்கள் திருமதி ஆ.தமிழரசி, எஸ்.மாங்குடி, சிவகங்கை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ஆஷா அஜித், உள்ளாட்சி அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.